ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# உரிமம்பெற்ற வங்கிகள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் என்பவற்றின் வைப்பாளர்களுக்கான தனித்துவமான அடையாள இலக்கங்கள்

இலங்கை மத்திய வங்கியானது, உரிமம்பெற்ற வங்கிகளும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும், 2022 ஒத்தோபர் 1 இலிருந்து வைப்புக் கணக்குகளை ஆரம்பிக்கின்ற அல்லது பராமரிக்கின்ற போது ஒவ்வொரு வைப்பாளருக்குமெனத் தனித்துவ அடையாள இலக்கமொன்றினைப் பதிவுசெய்யுமாறும், ஏற்கனவேயுள்ள வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களை இற்றைப்படுத்துமாறும் கட்டாயப்படுத்தியது.

2024 மே மாதத்தில், இலங்கை மத்திய வங்கியானது இது தொடர்பில் விடுக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளை மாற்றீடு செய்து, 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்வதற்கான செயற்பாட்டு அறிவுறுத்தல்களை விடுத்தது. மேலும், ஏற்கனவேயுள்ள வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் இற்றைப்படுத்துவதற்கான இறுதித் திகதியும் 2024 திசெம்பர் மாதம் 31 வரை நீடிக்கப்பட்டது.

அதற்கிணங்க, உரிமம்பெற்ற வங்கிகளுடனும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுடனும் வைப்புக் கணக்குகளை ஆரம்பிக்கின்ற அல்லது பராமரிக்கின்ற போது வைப்பாளர்கள் பின்வரும் கட்டாயமான தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பயன்படுத்தவேண்டும்:

| | **வைப்பாளர்களின் வகை** | **அடையாள ஆவணத்தின் வகை/ உருவாக்க வேண்டிய இலக்கம்** |
|---|---|---|
| 1. | **தனிநபர்கள்** | |
| 1.1 | இலங்கைப் பிரசைகள் | தேசிய அடையாள அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம்<br><br>*மாற்று ஆவணங்கள்*<br><br>*கணக்குகளை ஆரம்பிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்கியுள்ள வைப்பாளரின் சாரதி அனுமதிப்பத்திரத்தை அல்லது கடவுச்சீட்டை ஏற்றுக்கொள்ளலாம். ஆயினும், அவர்களது முறைமையில் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினைப் பதிவுசெய்வது கட்டாயமாகும்.* |
| 1.2 | இலங்கைப் பிரசைகள் (இலங்கைக்கு வெளியே வதிபவர்/ நிரந்தர வதிவிட உடைமையாளர்/ தற்காலிக வதிவிட உரிமையாளர்), இரட்டைப் பிரசாவுரிமையினைப் பெற்ற இலங்கையர் (இலங்கையில் வதிபவர்),<br><br>இரட்டைப் பிரசாவுரிமையினைப் பெற்ற இலங்கையர் (இலங்கைக்கு வெளியே வதிபவர்) | தேசிய அடையாள அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம்<br>*விதிவிலக்கான சூழ்நிலைகள்*<br>*தேசிய அடையாள அட்டை இல்லாத பின்வரும் சந்தர்ப்பங்களில் இலங்கை கடவுச்சீட்டு இலக்கத்தினைப் பயன்படுத்த முடியும்.*<br>*(அ) தேசிய அடையாள அட்டை வைப்பாளரால் தற்காலிகமாகக் ஒப்படைக்கப்பட்டிருத்தல்*<br>*(ஆ) வெளிநாட்டில் வாழும் ஒரு இலங்கையரொருவர்*<br>*(இ) பராயவயதை அடையும் முன் இலங்கையை விட்டு வெளியேறிய சூழ்நிலையால் தேசிய அடையாள அட்டையை வைத்திருக்காமை*<br>*இத்தகைய சூழ்நிலைகளில், வைப்பாளர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டைகளை விரைவில் பெற்று, உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களின் முறைமைகளில் அவற்றை புதுப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.* |
| 1.3 | இலங்கையரல்லாப் பிரசைகள் - இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட வெளிநாட்டவர் உட்பட (இலங்கைக்கு வெளியே வதிபவர்) இலங்கைக்குத் தற்காலிகமாக விஜயம் செய்கின்ற அல்லது இலங்கைக்கு விஜயம் செய்ய உத்தேசித்துள்ள வெளிநாட்டுப் பிரசைகள், வெளிநாட்டு இராசதந்திரிகள் ஆகியோரை உள்ளடக்கும் | வெளிநாட்டு கடவுச்சீட்டு மற்றும் கடவுச்சீட்டு இலக்கம் |
| 1.4 | பராயமடையா வைப்பாளர்கள் (தேசிய அடையாள அட்டை பெறும் வரை) | பிறப்புச் சான்றிதழ்: *தேசிய அடையாள அடைடையைப் பெற்றுக்கொள்ளும் வரை அடையாள இலக்கமாக பிறந்த திகதியைத் தொடர்ந்து பிறப்புச் சான்றிதழ் இலக்கத்தினைப் பதிவுசெய்ய வேண்டும்* |
| 2. | **நிறுவனங்கள்** | |
| 2.1 | கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள் | கம்பனிப் பதிவுச் சான்றிதழ் மற்றும் கம்பனிப் பதிவு இலக்கம் |
| 2.2 | அரசசார்பற்ற அமைப்புக்கள் | அரசசார்பற்ற அமைப்புகளுக்கான தேசிய செயலகத்தினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் மற்றும் இயைபுடைய பதிவு இலக்கம் |
| 2.3 | தனியுடைமை/ பங்குடைமை/ இணைந்த கூட்டு முயற்சிகள் போன்ற பிரதேச/ உள்ளூ ராட்சி நிறுவனங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் | வியாபாரப் பதிவுச் சான்றிதழ் மற்றும் வியாபாரப் பதிவு இலக்கம் |
| 2.4 | பாராளுமன்றச் சட்டமொன்றால் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனம் | பாராளுமன்ற தொடக்கச் சட்டத்தின் பிரதி: *தொடக்கச் சட்ட இலக்கத்தைத் தொடர்ந்து கூட்டிணைக்கப்பட்ட ஆண்டைப் பதிவுசெய்தல் வேண்டும்.* |
| 2.5 | கழகங்கள், அமைப்புகள், சங்கங்கள் போன்ற ஏனைய அனைத்து நிறுவனங்களும் | இயைபுடைய அதிகார சபையினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் மற்றும் இயைபுடைய பதிவிலக்கம்.<br><br>*பதிவு செய்யப்படாத நிறுவனங்களுக்கான மாற்றீடுகள்*<br><br>*பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையின் கீழ் உரிமம் பெற்ற வங்கிகள் மூலம் பெறப்பட்ட அடையாள இலக்கங்கள் குறிப்பிட்ட நிறுவனத்திற்கான தனித்துவமான அடையாள இலக்கமாகப் பதிவுசெய்ய அனுமதிக்கப்படுகின்றன.* |

இயைபுடைய அதிகாரசபைகளின் கீழ் தமது பதிவினை இதுவரையிலும் பெற்றுக்கொள்ளாத கழகங்கள், அமைப்புகள், சங்கங்கள் போன்றன உள்ளடங்கலாக அனைத்து நிறுவனங்களும் அவ்வாறு செய்வதற்கும் உரிய உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் என்பவற்றில் அடையாள இலக்கத்தை இற்றைப்படுத்தவும் வலியுறுத்தப்படுகின்றனர்.

மேற்கூறிய தனித்துவமான அடையாள இலக்கத்தைப் பதிவுசெய்யத் தவறினாலோ, அல்லது மாற்று அடையாள இலக்கங்களைப் பயன்படுத்தினாலோ, வங்கி அல்லது நிதிக் கம்பனி ஒன்றின் உரிமம் இரத்துசெய்யப்படும் போது/ இரத்துசெய்யப்பட்டால், வைப்பாளர்கள் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் நட்டஈட்டினை உரிமைகோரும் போது தாமதங்களையும் சிரமங்களையும் எதிர்கொள்ள வழிவகுக்கும்.

ஆகையால், அனைத்து வைப்பாளர்களும் (தனிநபர் மற்றும் ஆள்சாரா என இருவகையினதான வைப்பாளர்களும்) தாங்கள் அவ்வாறு செய்திருக்காவிடின் தங்களது தனித்துவ அடையாள இலக்கங்களை உரிய உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் உடனடியாக அறிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

**பணிப்பாளர்**
**வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானங்கள் திணைக்களம்**
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி: 0112477261
மின்னஞ்சல்: ddir@cbsl.lk